# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 •அக்டோபர் 16, 2021 Weekly E-paper • October 16, 2021




## உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள்

-சாரதா தேவி

## பெ.மணியரசன் புரட்டுக்கு வாலாசா வல்லவன் பதிலடி!

நேர்காணல்: மா.உதயகுமார்

## பட்டாசு! பட்டாசு!

தலையங்கம்

## இருட்டுக்குள் டிஜிட்டல் இந்தியா

முனைவர் பூ.மணிமாறன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • அக்டோபர் 16, 2021 Weekly E-paper • October 16, 2021


# உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள்

**-சாரதா தேவி**

*நிர்வாக வசதிக்காகப் பிரிக்கப்பட்ட 9 மாவட்டங்களுக்கு உள்ளாட்சித் தேர்தல்கள் அக்டோபர் 6 மற்றும் 9 ஆம் நாள்களில் இரண்டு கட்டங்களாக நடந்து முடிந்து 13.10.2021 அன்று முழுவதுமாக முடிவுகள் அறிவிக்கப் பட்டுவிட்டன. 140 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களும் (மாவட்ட கவுன்சிலர்கள்), 1,381 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களும், 2,901 ஊராட்சித் தலைவர்களும், 22,581 ஊராட்சி வார்டு உறுப்பினர்களும் இந்தத் தேர்தல் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.*



*மொத்தம் 27,003 பதவிகளுக்கு 79,433 வேட்பாளர்கள் களமிறங்கிய நிலையில், 2981 வேட்பாளர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். மீதமுள்ள 24022 பதவிகளுக்கு வாக்கெடுப்பு நடந்தது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவிகளுக்கு மட்டுமே கட்சிகள் போட்டியிட முடியும். ஊராட்சித் தலைவர் பதவிகளுக்கும், ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவிகளுக்கும் சுயேட்சைகள் மட்டுமே போட்டியிட முடியும். கட்சிச் சின்னங்கள் வேலைக்கு ஆகா. போட்டியிடும் உறுப்பினரின் சொந்த மதிப்பீடே மக்களிடம் ஆட்சி செலுத்தும் வண்ணம் செய்யப்பட்ட ஏற்பாடு இது.*

*140 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களில் 138 உறுப்பினர் பதவிகளைத் தி.மு.க. கூட்டணிக் கைப்பற்றி உள்ளது. ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களில் 1381ல் 1027 பதவிகளைத் தி.மு.க. கூட்டணிக் கைப்பற்றி உள்ளது. அதிலும் எதிர்க்கட்சியான அ.தி.மு.க, தி.மு.க.வின் கூட்டணிக் கட்சிகளான காங்கிரசு, வி.சி.க ஆகியவற்றை விடக் குறைவானப் பதவிகளைக் கைப்பற்றி மக்களிடம் படுதோல்வியைச் சந்தித்து உள்ளது.*

*காங்கிரசு 6 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களையும், 30 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களையும் கைப்பற்றி உள்ளது. விடுதலைச் சிறுத்தைகள் கொடுக்கப்பட்ட 4 இடங்களில் 3 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களையும், 43ல் 27 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களையும் பெற்று மூன்றாம் நிலைக்கு உயர்ந்துள்ளதோடு அரசியலில் மய்ய நீரோட்டத்தில் பங்கு பெறும் பொதுக் கட்சியாகவும் நம்பிக்கையானக் கட்சியாகவும் மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.*

*தனித்து நின்றப் பாட்டாளி மக்கள் கட்சி, மக்கள் நீதி மய்யம், நாம் தமிழர் உள்ளிட்டக் கட்சிகள் ஒரு மாவட்டப் பதவியைக் கூடக் கைப்பற்றவில்லை. பா.ம.க சில ஒன்றியப் பதவிகளைக் கைப்பற்றி உள்ளது. எஞ்சியவை ஒன்றிய அளவிலும் எந்தப் பதவிகளையும் கைப்பற்றவில்லை. இவர்களை ஒப்பிடுகையில் விஜய் மக்கள் இயக்கம் கூட சில ஒன்றியப் பதவிகளைக் கைப்பற்றி உள்ளது.*

*தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், அக்டோபர் 2 அன்று பாப்பாப்பட்டி ஊராட்சியில், பதவியேற்ற பின்னான முதல் கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்றார். அதன் பின் அவர் ஊராட்சித் தேர்தல் பரப்புரைக்குக் கூடச் செல்லவில்லை. ஆனால் அவர் தன் வெற்றியை அங்கேயே ஈட்டிவிட்டார் என்றே சொல்லவேண்டும். முதல்வர் அவர்கள், தன் ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் கடத்தும் செய்திகளை மக்கள் கற்பூரமாகப் பற்றிக் கொள்கிறார்கள் என்றே கருத வேண்டி உள்ளது. "சட்டங்களையும் திட்டங்களையும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்தே செயல்படுத்த இயலும். ஆதலால் மக்கள் உள்ளாட்சியிலும் தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்" என அவர் வைத்த வேண்டுகோளை மக்கள் சிரமேற்கொண்டு 95% வெற்றியைத் தி.மு.க. கூட்டணிக்குக் கொடுத்துள்ளார்கள். "இனி உள்ளாட்சியிலும் நல்லாட்சியே" என்று முதல்வர் அவர்கள் தன் நன்றி அறிவிக்கையில் வாய்மொழிந்துள்ளார்.*


*ஊராட்சித் தலைவர் பதவிகளிலும், ஊராட்சி வார்டு உறுப்பினர்களாகவும் தி.மு.க. ஆதரவுடன் களத்தில் நின்றவர்களே வெற்றி பெற்றுள்ளனர். தென்காசி மாவட்டம், வெங்கடாம்பட்டி ஊராட்சித் தலைவராக 21 வயது சாருகலா (இளையவர்) முதல், அதே மாவட்டத்தைச் சேர்ந்த சிவந்திப்பட்டி ஊராட்சித் தலைவராக 90 வயது பெருமத்தாள் (முதியவர்) வரை தி.மு.க.வின் ஆதரவாளர்கள்தான்!*

*மாவட்டங்களைப் பிரித்து உள்ளாட்சியில் கைவைக்கப் பெரிதாக திட்டமிட்டிருந்த அ.தி.மு.க விட்டால் போதுமென, "எங்களுக்கும் வாக்களித்தவர்களுக்கு நன்றி" எனச் சொல்லிவிட்டது. தேர்தல் ஆணையத்தைக் கைக்குள் போட்டுக்கொண்டு முடிவுகள் அறிவித்ததாகச் சொல்வதெல்லாம் வழமையான போலிக் குற்றச்சாட்டுகள்தான். ஆதாரமிருந்தால்தான் வழக்குத் தொடுப்பார்களே. கொட நாடு வழக்கை மறப்பாரா முதல்வர் என அவர்கள் அடுத்தக் கவலைக்குத் தாவி இருப்பார்கள். "நாங்கள் வளர்கிற கட்சி", "எங்கள் வாக்காளர்கள் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்", "நாங்களே கவலைப்படவில்லை" என்றெல்லாம் தோல்வி குறித்துப்பேசி, தன் முன்னே திரளும் இளைஞர்களைக் கேலிப் பொருளாக மாற்றிக் கொண்டுள்ளார் நாம் தமிழர் கட்சியின் சீமான்.*

*மொத்தத்தில் மக்கள் விழித்துக் கொண்டார்கள்! தத்துவத்தைத் தலைமையேற்றுள்ளார்கள்! ஆம் ஸ்டாலின் எனும் திராவிடத் தத்துவத்தை! இனி வீழ்ச்சி என்பது எம் மக்களுக்கு இல்லை!*

●

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொருளாளர் தோழர் எழில் இளங்கோவன் அவர்கள், ஆதி திராவிடர் - பழங்குடியினர் நல ஆணைய உறுப்பினராகத் தமிழக அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு நம் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்! இந்நியமனத்தின் மூலம் , ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் பல்லாற்றானும் தொடர்ந்து பாடுபட்டு வரும் தோழருக்கும், பேரவைக்கும் தமிழக அரசு பெருமை சேர்த்துள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் நம் நன்றி, நன்றி!




**சுப.வீரபாண்டியன்,**

பொதுச் செயலாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை

# பெ.மணியரசன் புரட்டுக்கு வாலாசா வல்லவன் பதிலடி

**"தமிழ் இந்து" என்று பேசிவரும் திரு.பெ.மணியரசன் அண்மையில் ஒரு நேர்காணலில், "பெரியாரும் பெரியாருடையத் தொண்டர்களும் இந்து மதத்தில் தான் இருக்கிறார்கள், மதத்தை ஒழிக்க முடியாது என்று பெரியாரே ஒப்புக்கொண்டு விட்டார், இந்து மதத்தை எதிர்க்கிறோம் என்று பொய்யாகச் சொல்லிவிட்டு பெரியாரியலாளர்கள் இந்து மதத்திலேயே இருக்கும்போது நாங்கள் நேர்மையாக தமிழ் இந்து என்று அடையாளப்படுத்துவதில் என்ன தவறு?" என்று நம்மை நோக்கிக் கேள்வி எழுப்பியிருக்கிறார். இதைப் பற்றிய உங்களுடையக் கருத்து.**



தோழர் பெ. மணியரசன் அவர்களுடையக் காணொளியை நானும் பார்த்தேன். பெரியார் அவர்களின் 95ஆவது பிறந்தநாள் அறிக்கையின் ஒரு பகுதியை மட்டும் எடுத்துவைத்துக் கொண்டு பெரியார் இந்து மதத்தை அழிக்க முடியாது என்று கூறிவிட்டார் ஆகவே நாம் இந்து என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார். பெரியார் சொன்னதை எல்லாம் இவர் ஏற்றுக் கொண்டதைப் போல. பெரியார் சொன்னதற்குத் தவறான விளக்கமும் அளித்துள்ளார்.

நமது இலட்சியம் என்ற தலைப்பில் 17.9.1973 அன்று விடுதலையில் பெரியாரின் பேச்சு இடம் பெற்றுள்ளது. ஆனைமுத்து அய்யா தொகுத்த "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகளிலும்" அந்த அறிக்கை இடம் பெற்றுள்ளது. மணியரசன் அவர்களின் காணொளியில் இடம் பெற்றச் செய்தி இதுதான். "இந்தியாவில் நாம் இருக்கும் வரை இந்துவாகத்தானே இருந்து ஆகவேண்டும். இந்து என்றாலே முஸ்லிம், கிறிஸ்தவம் தவிர மற்ற யாவருமே சூத்திரர், தாசிமக்கள் தான் என்று இருப்பதால் ஏதாவது முயற்சி செய்துதான் ஆகவேண்டும்.

நம் மக்கள் எளிதில் மதம் மாறமாட்டார்கள். மதம் மாறுவதை இழிவாய்க் கருதுபவர்களாவார்கள்."

அதன் முன்னும் பின்னும் உள்ள செய்திகளை அவர் மறைத்துவிட்டார்.

"இந்திய அரசியல் சட்டத்தில் சமுதாய (மத) சம்பந்தமானக் காரியங்களைப்பற்றி பழைய மனுதர்ம நிலையை மிகமிகப் பலப்படுத்திக்கொண்டபடி இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், கர்ப்பக் கிரகத்திற்குள் சூத்திரன், அதாவது பண்டாரச் சன்னதி உட்பட இந்து என்ற தலைப்பில் வரும் எவருமே, பார்ப்பான் தவிர்த்து எவருமே செல்ல முடியாதென்று உச்ச நீதி (சுப்ரீம்) மன்றத் தீர்ப்பு இருப்பதினாலும், இன்னும் கோவிலுக்கு சாமி தரிசனத்திற்கென்று போகும் யாருமே தீண்டத்தகாதவர்கள் போல் வாயில்படிக்கு வெளியில்தான் எட்டி நிற்க வேண்டும் என்றால், மற்றபடி எதில் நாம் மாறுதலைக் காண முடியும்?



வாலாசா வல்லவன்



பெ.மணியரசன்

இன்று அமுலில் இருக்கும் "இந்து லா" என்னும் சட்டத்திலும், பல உயர் நீதி மன்றங்களின் தீர்ப்பிலும், பார்ப்பனரல்லாத இந்து மக்கள் என்பவர்களை மிக மிக இழிவாகக்கூறி நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்து என்னும் சொல்லுக்கு சட்டத்தில் கொடுத்திருக்கும் விளக்கம் என்னவென்றால், 'கிறிஸ்தவர்கள்-முஸ்லிம்கள் தவிர்த்த இந்தியாவில் உள்ள மக்கள் அனைவருமே இந்துக்கள் ஆவார்கள்'. இதன்படி நாத்திகன், பகுத்தறிவுவாதி, பரதேசி முதலிய சகலரும் இந்துக்கள் ஆகி சூத்திரர், பார்ப்பானின் தாசி மகன் என்று ஆகிவிடுகிறார்கள்.

நான் முதலில், நான் இந்து அல்ல என்று சொல்லிவிட்டால் இழிவு நீங்கிவிடும் என்றுதான் கருதினேன். பிறகு சட்டங்களைப் பார்க்க ஆரம்பித்த பிறகு கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் தவிர்த்த, இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் இந்துக்கள் - இந்துக்கள் என்றால் சூத்திரர்கள், வேசி மக்கள் என்று பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதலாலேயே தீவிர முயற்சி எடுக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

எனவே, நாம் சட்டத்தைப்பற்றிப் பயப்படாமலும், பதவி கிடைக்காதே என்று கவலைப்படாமலும் சுதந்திரத் தமிழ்நாடு பெற ஒவ்வொருவரும் முடிவு செய்துகொண்டு முன் வரவேண்டியது ஒவ்வொரு தமிழனுக்கும் அவசியமான காரியம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்." (பிறந்த நாள் விழா மலர் 95-17-9-1973)

சென்னையில், பெரியார் திடலில் 1973 டிசம்பர் 8, 9 தேதிகளில் நடைபெற்ற, 'தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு'களைப் பெரியார் நடத்தினார். இது அவர் தம் வாழ்நாளில் கடைசி மாநாட்டு நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.

ஆக இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்றால் தனித் தமிழ்நாடு பெற்றே ஆக வேண்டும் என்பதுதான் பெரியார் அவர்களின் இறுதித் தீர்வாகும்.

**நேர்கண்டவர்: மா.உதயகுமார்**

கற்றல் அறிவு





கற்றலே வாழ்வு



இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம்

கருஞ்சட்டைப் பதிப்பகத்தின்

**ஆறு நூல்களின் அறிமுக அரங்கம்**

நாள்: 22.10.2021 இடம்: அன்பகம்

நேரம்: மாலை 6.00 தேனாம்பேட்டை சென்னை - 18

தலைமை

**தோழர் செல்வின் சௌந்தர ராஜன்**

கருத்துரை

**திரு நாஞ்சில் சம்பத்**

வழக்கறிஞர் 'சிகரம்' **செந்தில்நாதன்**

**தோழர் இரா.உமா**



அனைவரும் வருக!

அன்புடன் அழைக்கும்

தோழர்

**சுப.வீரபாண்டியன்**

பொதுச்செயலாளர்,

திராவிட இயக்கத் தமிழர் பேரவை

தோழர் **குண சந்திரசேகர்**

தோழர் **விடுதலை**

தோழர் **ராஜஸ்ரீ**

படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

**அறிமுகமாகும் ஆறு நூல்கள்**

1. **'திராவிடம் யாருக்குக் கசக்கும்'** விலை: ரூ.10/-
   - பேராசிரியர் கருணானந்தன்
2. **'கருவறை நுழைவும் ஜாதி ஒழிப்பும்'** விலை: ரூ.130/-
   - பேராசிரியர் வெ.சிவப்பிரகாசம்
3. **'தமிழ்த் தேசிய அரசியலைச் சிதைக்கும் பார்ப்பனியக் கங்காணிகள்'** விலை: ரூ.10/-
   - திரு பொழிலன்
4. **'திராவிடத் தமிழ்த் தேசியம்'** விலை: ரூ.20/-
   - திரு வாலாசா வல்லவன்
5. **'பச்சைத் துரோகம்'** விலை: ரூ.10/-
   - திரு ஆழி செந்தில்நாதன்
6. **'நீங்கள் எந்தப் பக்கம்'** விலை: ரூ.70/-
   - தோழர் சுப.வீரபாண்டியன்

மேலே காணப்படும் ரூ.250/- மதிப்புள்ள புத்தகங்கள் விழா அரங்கில் ரூ.200/-க்கு கிடைக்கும்

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**


தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## பட்டாசு! பட்டாசு!

தீபாவளி நெருங்கிக் கொண்டிருக்கிறது. தீபாவளிப் பண்டிகையை ஆர்வத்துடனும், மகிழ்ச்சியாகவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் மக்கள்.

தீபாவளி என்பது நமக்கு ஏற்புடைய பண்டிகை இல்லை. ஆனால், மக்கள் இன்னும் தீபாவளியை விட்டு வெளிவரவும் இல்லை. அந்த நாளில் வெடிக்கப்படும் பட்டாசுகளுக்கும் அதை உற்பத்தி செய்பவர்களுக்கும் இடையே இருக்கும் தொடர்பை மறுத்துவிட முடியாது.

நராகாசுரனைக் கொன்றதன் காரணமாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முகமாகப் பட்டாசுகள் வெடிக்கின்றனர் என்பது தவறுதான். இங்கே பட்டாசுகள் வெடிப்பது சரியா, தவறா, என்பதல்ல கேள்வி. அதன் விளைவு என்ன என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

தீபாவளி அன்று பட்டாசு வெடிப்பதைச் சில மாநில அரசுகள் தடை செய்கின்றன. அதற்கு அவர்கள் கூறும் காரணம் காற்று மாசடைகிறது, சுற்றுச்சூழலுக்குப் பட்டாசு வெடிப்புகள் கேடாய் அமைகிறது என்பதுதான்.

சுற்றுச்சூழலும், காற்றும் மாசடைகிறது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், பட்டாசுகளுக்குப் பின்னால் ஒரு வாழ்க்கையும் இருக்கிறது.

சிவகாசி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் பட்டாசுத் தொழில் பெருமளவில் நடைபெறுகிறது. ஏறத்தாழ 8 லட்சம் பட்டாசுத் தொழிலாளர்கள் இதில் பணி புரிகிறார்கள். பட்டாசுத் தடை செய்யப்பட்டால் இவர்களின் வாழ்வு கேள்விக்குறியாகிவிடும்.

அது மட்டுமல்ல. சிறு குறு நடுத்தர தொழில்களைச் சார்ந்தே தமிழக அரசின் வளர்ச்சி மற்றும் அதன் வேலை வாய்ப்புகள் இருக்கின்றன.

இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்காமல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்பதைப் போல பட்டாசுத் தொழிலையே முற்றிலுமாக தடை செய்வது என்பது சரியான அணுகுமுறை அல்ல.

ஆகவே தீபாவளிப் பட்டாசுகளை வெடிப்பதற்கு சரியான நெறிமுறைகளை வகுப்பதும், பட்டாசுகள் தயாரிப்பதிலும் இது போன்ற நெறிமுறை வழிகாட்டுதலைச் சொல்வது அரசின் கடமை.

இதனைத் தமிழக முதல்வர் அவர்கள் பிற மாநில முதல்வர்களுக்கும் கடிதம் மூலமாக எழுதி இருக்கிறார் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.


ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:

**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

வெளியீடு:

திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்

**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு

120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# இருட்டுக்குள் டிஜிட்டல் இந்தியா

முனைவர் பூ.மணிமாறன்

தமிழ்நாடு மற்றும் அனைத்து மாநிலங்களிலும் இந்திய ஒன்றியம் முழுவதும் அனல்மின் நிலையங்களுக்கான நிலக்கரிப் பற்றாக்குறை உச்சத்தை எட்டியுள்ளது. இதனால் நாடு முழுவதும் மின்சார உற்பத்திக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்துப் பல மாநிலங்கள் பல மணிநேர மின்வெட்டை அமல்படுத்துவதாக அறிவித்துள்ளன. குறிப்பாகக் கொரோனா பாதிப்புக்குப் பின் பொருளாதார மீட்சியை நோக்கி பெரும்பாலானத் துறைகள் இயங்கத் தொடங்கிவிட்டன. உற்பத்தித் துறை உள்ளிட்டப் பல தொழில் துறைகள் முழு வீச்சில் செயல்பட்டு வருவதால் நாட்டில் மின்சாரத் தேவை அதிகரித்துள்ளது. மேலும் குஜராத், பஞ்சாப், ராஜஸ்தான், டெல்லி மற்றும் தமிழகத்தில் கனமழை காரணமாகக் கையிருப்பில் உள்ள நிலக்கரி விநியோகம் குறைந்து போனது. சர்வதேசச் சந்தையில் நிலக்கரியின் விலை அதிகரித்ததால் நிலக்கரி இறக்குமதி 40% குறைந்து போய்விட்டது.

கடந்த மார்ச் மாதம் சர்வதேசச் சந்தையில் 1 டன் நிலக்கரி விலை 60 டாலராக இருந்தது. ஆனால் செப்டம்பர்-அக்டோபரில் 1 டன் நிலக்கரி விலை 160 டாலடராக உயர்ந்திருப்பது நிலைமையை மோசமாக்கி உள்ளது. எரிவாயு விலை அதிகரித்திருப்பதால் எரிவாயு மூலமான மின்உற்பத்திக் குறைந்துள்ளது. அணுமின் நிலையங்கள் பராமரிப்பு உள்ளிட்டக் காரணங்களுக்காக மூடப்பட்டதால் மின் உற்பத்தியில் சரிவு ஏற்பட்டுள்ளது. அதனால் நிலக்கரி மூலமான மின் உற்பத்தியின் தேவை அதிகரித்துள்ளது. நிலக்கரிப் பற்றாக்குறைக் காரணமாக நாடு முழுவதும் மொத்தம் 135 அனல்மின் நிலையங்கள் பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளன. நாட்டின் 16 அனல்மின்நிலையங்களில் நிலக்கரிக் கையிருப்பில் இல்லை; 45 அனல்மின் நிலையங்களில் நிலக்கரிக் கையிருப்பு ஓரிருநாட்களுக்கு மட்டுமே இருக்கிறது.



பஞ்சாப் மாநிலத்தில் 3 அனல்மின் நிலையங்களில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது. மேலும் நாளை முதல் ஒருநாளைக்கு 3 மணிநேரம் மின்வெட்டு அமல்படுத்தப்பட உள்ளது. கர்நாடகா மாநில தலைநகர் பெங்களூருவில் பல்வேறு இடங்களில் நாள் முழுவதும் மின்வெட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. பீகார், ராஜஸ்தான், ஜார்க்கண்ட் மாநிலத்தில் சுமார் 14 மணிநேர மின்வெட்டு அமல்படுத்தப்படுகிறது. மகாராஷ்டிராவில் 13 அனல்மின் நிலையங்கள் நிலக்கரிப் பற்றாக்குறையால் மூடப்பட்டுள்ளன. மேலும் மகாராஷ்டிராவிலும் மின்வெட்டு அமல்படுத்தப்படுகிறது. உ.பி.யில் மின்சாரப் பற்றாக்குறையை எதிர்கொள்வது தொடர்பாக மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனைக் கூட்டங்களை நடத்தி வருகிறார். இவ்வாறாக நிலக்கரி விவகாரம் பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

இந்நிலையில் ரூ.971 கோடி ரூபாய் செலவில், புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தைக் கட்ட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்தக் கட்டிடத்தின் கட்டுமானப் பணியை, 'டாடா ப்ராஜெக்ட்ஸ்' நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளனர். இதில் பிரதமரின் வீடு மட்டுமே 200 கோடிக்குக் கட்டத் திட்டமிட்டுள்ளனர். இவ்வாறாக அரசுப் பணத்தை ,மக்களின் பணத்தை வீண் செலவு செய்கின்றனர். ஆனால் மின்சாரத் தட்டுப்பாட்டுக்கு உரியத் தொகையை ஒதுக்கி நிவாரணம் காண முடியவில்லை .

600 அடி அகலம் கொண்ட 182 அடி உயரம் கொண்டச் சிலையைக் குஜராத் மாநில அரசு கட்டி வந்தது. இதுவே உலகின் உயரமான சிலை என்று கூறப்படுகிறது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றிய சர்தார் வல்லபாய் பட்டேலுக்குச் சுமார் 3,000 கோடி ரூபாய் செலவில் வெங்கல சிலை அமைக்கப்பட்டுள்ளது. இவ்வளவுச் செலவுகளை வீணாகச் செய்யும் ஒன்றிய அரசு மின் தட்டுப்பாட்டுக்குத் தேவையானத் தொகையை ஒதுக்கத் தவறுகிறது.

மத்திய மின்சார வாரியத் தரவுகளின்படி இந்தியாவிலுள்ள 135 அனல் மின் நிலையங்களில் 115 அனல் மின் நிலையங்களுக்கு ஒரு வாரத்திற்கும் குறைவான நாட்கள் மட்டுமே நிலக்கரிக் கையிருப்பு உள்ளது. இதில் 17 அனல் மின் நிலையங்களுக்கு ஒரு நாள் மட்டுமே நிலக்கரிக் கையிருப்பு உள்ளது. 22 அனல் மின் நிலையங்களுக்கு 2 நாட்கள் மட்டுமே கையிருப்பு உள்ளது.

தமிழகத்தில் சில நாட்களுக்குப் போதுமான நிலக்கரிக் கையிருப்பு உள்ளதாக அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார். தமிழ்நாட்டில் வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு மட்டும் அதிகபட்சமாக 5 நாட்கள் நிலக்கரிக் கையிருப்பு உள்ளது. மற்ற அனல் மின் நிலையங்களுக்கு ஐந்திற்கும் குறைவான நாட்கள் மட்டுமே நிலக்கரிக் கையிருப்பு உள்ளது. ஒன்றிய அரசின் மின்சாரத்துறையானது மின்சாரத்திற்கானத் தேவை திடீரென அதிகரித்ததும், இந்தியாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் கடந்த செப்டம்பரில் பெய்த மழையும்தான் இந்தத் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் எனத் தெரிவித்துள்ளது.

மோடி தலைமையிலான ஒன்றியஅரசு பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் தனியாருக்கு விற்பனை செய்வதில் மட்டுமே கவனத்தைச் செலுத்துகிறது. மாறாக மக்களின் அன்றாடத் தேவையான மின்சார உற்பத்தித் தடைபடுமானால், அதன் பாதிப்பு நாட்டின் பொருளாதாரத்தில் போய் முடியும் என்பதுகூட அறியாத பிரதமராக இருக்கிறார் மோடி.

மக்களின் வாழ்க்கைக்கு எதிராக இருக்கும் ஆட்சி அதே மக்களின் கோபத்தாலும், வாக்குகளாலும் திருப்பிஅடித்து விரட்டும் சூழல் ஏற்படும், என்பதை மோடிக்கு மின்சாரமும் நிலக்கரியும் புரிய வைக்கும்.

அதற்கானக் காரணம் வந்து கொண்டு இருக்கிறது. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,